# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.07.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 2436/F/2022**

திருமதி.வளர்மதி, மேல்முறையீட்டாளர்s
1/114, துத்திப்பாளையம்,
மானத்தி அஞ்சல்,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம்-637 212.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம் -- பொது அதிகார அமைப்பு
நாமக்கல்-637 001,
நாமக்கல் மாவட்டம்.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 18.06.2022 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலர், நாமக்கல் வட்டாட்சியர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், நாமக்கல் மாவட்டம், பொம்மம்பட்டி ஊராட்சி, சிங்கிலிப்பட்டி கிராமத்தல் சர்வே எண்.439/17, பட்டா எண்.61-ன் அனுபவதாரர் பெயர் அடங்கிய அ-பதிவேடு நகல் (அ) நத்த பதிவேட்டு நகல் என்ற தகவலை வழங்கக் கோரியுள்ளார்.

2. மனுதார் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து காலதாமதமாகியும் பதில் வழங்கவில்லை என தெரிவித்து 05.08.2022 தேதியிட்டு பிரிவு 18 (1)-ன்கீழ் புகார் மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் CP 2436/F/2022 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன புகார் மனுவின் மீது காணொளி காட்சி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 03.07.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய காணொளி காட்சி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோருக்கு ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்றைய காணொளி காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் பொதுத் தகவல் அலுவலர் திருமதி.பு.பிரபா, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், நாமக்கல் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய காணொளி காட்சி விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து ந.க.5090/2022/அ1, நாள் 13.09.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதனை மனுதாரரும் கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள், இன்றைய விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலரால் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகளைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் 6(1)-ன் கீழான மனுவிற்கு ந.க.5090/2022/அ1, நாள் 13.09.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து தனது வாதுரைகளை எடுத்துரைக்க மனுதாரருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தும் இன்றைய விசாரணைக்கு ஆஜராக தவறியுள்ளார். இந்நிலையில், ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- **மனுதாரரின் 18.06.2022 தேதியிட்ட தகவல் கோரும் மனுவிற்கு உரிய காலத்திற்குள் தகவல்கள் வழங்காகததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.க.ஞானராஜ், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) மற்றும் 20 (2)-ன்கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள்**

**தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு மேற்சொன்ன அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மேற்சொன்ன பொதுத் தகவல் அலுவலரிடம் விளக்கத்தினை பெற்று 31.07.2025 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ:ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**வழக்கு எண். CP 2436/F/2022**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
நாமக்கல்-637 001,
நாமக்கல் மாவட்டம்.

**(அப்போதைய) பொதுத் தகவல் அலுவலர் (18.06.2022 தேதிய)**
**திரு.க.ஞானராஜ்,**
**தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**நாமக்கல் மாவட்டம்**

**மனுதாரர்:-**

திருமதி.வளர்மதி,
1/114, துத்திப்பாளையம்,
மானத்தி அஞ்சல்,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம்-637 212.

**<u>நகல்</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாமக்கல் மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.

Copy to: File NS/PA-